09.06.2025

அசல் வழக்கு எண்: 147/2012

வா.சா.3சாட்சி பூமாரி 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டுகோளின்படி கடந்த 25.04.2025ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டதன் பேரில் இன்று இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி விசாரணை செய்யப்படுகிறார்.

1. சா.சா.ஆ.1 ல் களம் 1ல் தற்போது நடைமுறையில் பராமரித்து வருகிற சர்வே எண்கள் என்றால் சரிதான். களம் 2ல் தற்போது சர்வே எண்களின் பழைய சர்வே எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொண்டுவந்துள்ள அ பதிவேட்டில் சர்வே எண்.158/1 ன் பழைய சர்வே எண். 158/1A1ஆகும் என்றால் சரிதான். சர்வே எண்.158/2 ன் பழைய சர்வே எண்.158/1A2 ஆகும் என்றால் சரிதான். சர்வே எண்.158/3ன் பழைய சர்வே எண்ணும் 158/1A2 தான் என்றால் சரிதான். சர்வே எண்.158/4 ன் பழைய சர்வே எண் 158/1B ஆகும் என்றால் சரிதான். சர்வே எண்.158/5Aன் பழைய சர்வே எண்.158/1B ஆகும். சர்வே எண்.158/5Bன் பழைய சர்வே எண்.158/1Bதான். சர்வே எண். 158/6A ன் பழைய சர்வே எண்.158/2 ஆகும்.

2. சர்வே எண்.158/10A ன் பழைய சர்வே எண். 158/6A ஆகும். சர்வே எண்.158/12Aன் பழைய சர்வே எண்ணும்.158/12Aதான். தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.158/1B ஆனது உட்பிரிவு செய்யப்பட்டு தற்போதைய சர்வே எண்.158/5A,158/5B மற்றும் 158/4 ஆகமட்டும்தான் உள்ளது. அதனை தவிர்த்து வேறு உட்பிரிவுகள் எதுவும் தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் சொல்லப்பட்டுள்ள மற்ற சர்வே

உட்பிரிவுகளான 158/10A, 158/12A, 158/6A எதுவும் சர்வே எண்.158/1B யில் உட்பிரிவுகள் அல்ல என்றால் சரிதான்.

**(சாட்சி புல வரைபடத்தின் அசல் பதிவேட்டை நீதிமன்றத்திற்கு இன்று சாட்சியம் அளிக்க எடுத்துவராத சூழல் ஏற்பட்டதால் அதனை பொறுத்து 1, 3 பிரதிவாதிகள் தரப்பில் கேள்விகளுக்கு பதில் அளிக்க முடியாததால் சாட்சியின் வேண்டுகோளின்படி சா.சா.ஆ. 1 முதல் சா.சா.ஆ. 6 வரையான ஆவணங்களுடன் அடுத்த வாயிதாவிற்கு ஆஜராகவேண்டும் என்று ஒத்தி வைக்கப்படுகிறது.)**